**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**OS No. 209/2022**

**09.02.2026 பி.வா.சா. 2 ராஜா த/பெ. மாரி**

சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி முருகன் எனக்கு 20 வருடமாக பழக்கம். 1ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி அவருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் அவர் மனைவி ராஜேஸ்வரிக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். முருகனுக்கு குடிப்பழக்கம் இருந்தது என்றும், அதனால் அவர் குடும்பத்தை கவனிக்காமல் விட்டதுதான் பிரச்சனை என்று சொன்னால் சரியல்ல. முருகனுக்கும் ராஜேஸ்வரிக்கும் இடையே என்ன குடும்ப பிரச்சனை என்று எனக்கு தெரியாது. முருகனும் ராஜேஸ்வரியும் கடந்த 10 –15 வருடங்களாக பிரிந்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் பிரிவிற்கு காரணம் முருகனின் குடிப்பழக்கம் என்றால் சரியல்ல. தாவாசொத்து முருகனுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. முருகனுக்கு தாவா சொத்து அவர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்து என்றால் சரிதான். அது முருகனின் தந்தைக்கு கிடைத்த பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. முருகனின் தந்தைக்கு அரசு பட்டா கொடுத்த சொத்து. பி.வா.சா.1 செல்வராஜ் காவல் துறையில் பணியாற்றியவர் என்றால் சரிதான். செல்வராஜிக்கு அது மூதாதையர் சொத்து என்று தெரியும் என்று சொன்னால் சரியல்ல. முருகனின் குடிப்பழக்கத்தை பயன்படுத்தி செல்வராஜ் தவறாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. முருகனின் குடிப்பழக்கத்தை பயன்படுத்தி அவரிடம் செல்வராஜ் 4 வெற்று பாண்டுகளில் கையொப்பம் பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும், நான் செல்வராஜிக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.